# கரடி



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com www.tamilacademy.com

# கரடி

நான் இங்கு உங்களுக்கு ஒரு விலங்கினை அறிமுகப்படுத்த விரும்புகிறேன். அதற்கு முன்பாக அவ்விலங்கினைக் காட்சிப்படுத்த விழைகிறேன்.

கறுப்பு கம்பளியைப் போர்த்தியது போன்ற உடல், நீண்ட மூக்கு, நிமிர்ந்து இரண்டு கால்களால் நடக்கும் திறன்.,என்ன காட்சி விரிந்ததா? சரி!.., இன்னும் ஒரு உதாரணம் தருகிறேன். தேனை விரும்பி உண்ணும்..,

கரடி! கரடி!

ஆம்!.., மிகச்சரியான பதில்.

நான் இங்கு அறிமுகப்படுத்த விரும்பிய விலங்கு கரடியாகும். கரடி நமக்கு இலக்கியங்களிலும் இதிகாசங்களிலும் அறிமுகமான விலங்கு தான். ஆனால் நாம் இங்கு சற்று கரடியின் வாழ்வியலையும் வகைகளையும் தெரிந்து கொள்ளலாம்.



கரடி, பாலூட்டி வகையைச் சேர்ந்த அனைத்துண்ணியாகும். அனைத்துண்ணி (Omnivorous) என்றால் தாவர மற்றும் மாமிச உணவுகளை உண்ணுதல் என்று பொருள். கரடி உர்சிடே (Ursidae) குடும்பத்தைச் சேர்ந்தது. ஆஸ்திரேலியா கண்டம் தவிர்த்து பூமியின் வடக்கு மற்றும் தென் அரைக்கோளப்பகுதியில் கரடிகள் காணப்படுகின்றன. குறிப்பாக ஆசியா, அமெரிக்கா, ஐரோப்பா போன்ற கண்டங்களில் கரடிகள் பரவலாகக் காணப்படும். கடலோரங்கள், சதுப்பு நிலங்கள், மலை முகடுகள், பனிப்பிரதேசங்கள், பாலைவனங்கள், காடுகள் மற்றும் புல்தரை பகுதிகளையும் கரடிகள் தங்கள் வாழ்விடங்களாகக் கொண்டுள்ளன.

கரடிகள் தனித்து வாழும் இயல்புடையன. குகைகளிலும் பொந்துகளிலும் வாழும். சராசரியாக நான்கு அடி உயரமும் நூற்றிப் பதினைந்து (115) கிலோ எடையும் கொண்டவை. பெண் கரடிகள் ஆண் கரடிகளை விட உருவத்திலும் எடையிலும் சிறியது. கரடியின் உடல் முழுவதும் ரோமங்கள் காணப்படும். ரோமங்கள் நெருக்கமாகவும் மென்மையானதாகவும் இருக்கும். தட்டையான வாலையும் குட்டையான காலையும் கொண்டது. கால்களை அழுத்தி இழுத்திழுத்து நடக்கும். இவற்றின் காலடித்தடங்கள் மனிதனின் காலடித்தடங்களை ஒத்திருக்கும். உடல் உறுப்புகள் உறுதியானவை. வளைந்த கூர்மையான நகங்களைக் கொண்டது. நிலத்தைத் தோண்டுவதற்கும் பிற விலங்குகளுடன் சண்டையிடுவதற்கும் நகங்களைப் பயன்படுத்தும். நகங்களில் சகதியும் அழுக்கும் சேர்ந்து இருப்பதால் அவை பாக்டீரியாக்களின் இருப்பிடமாகத் திகழும். இதனால் கரடியினால் ஏற்பட்ட காயம் விரைவில் குணமடையாது.





கரடிகள் பகலில் உணவு தேடும் தன்மையுடையன அதாவது பகலாடிகள் (Diurnal creature), புல், தேன், பழங்கள், பழவித்துக்கள், தண்டுகள், சில குறிப்பிட்ட இலைகள், மரப்பட்டைகள், கிழங்குகள், கரையான், மீன்கள், போன்றவற்றை உணவாக உண்ணும். மேலும் சிறு பறவைகள், பூச்சிகள், இறந்த உயிரினங்கள் ஆகியவையும் கரடிகளின் உணவாகும். இனங்களைப் பொருத்து உணவுகள் மாறுபடும்.



கரையான் புற்றில் வாயை வைத்து சத்தத்துடன் உறிஞ்சுவதும், மரத்தில் ஏறி தேனைக் குடிப்பதும், பூமியைத் தோண்டி கிழங்குகளை எடுப்பதும் பார்ப்பதற்கு சுவாரசியமாக இருக்கும். மேலும் உணவின் மிச்சத்தை இலைகளினால் மறைப்பது, வழக்கமாக ஒரே பாதையில் செல்லுதல், மரத்தில் நகங்களினால் கீறுதல், மரங்களில் உடலைத் தேய்த்து ரோமங்களை உதிர்த்தல் போன்ற பண்புகளும் ஆச்சர்யமூட்டுபவை. கரடிகள் மிகச்சிறப்பு வாய்ந்த கேட்கும் திறனையும் நுகரும் திறனையும் கொண்டது. ஆனால் மந்தமான பார்வைத்திறன் உடையது.



கரடிகள் மெதுவாக நடக்கும் இயல்பின. ஓடத்தொடங்கினால் மணிக்கு முப்பத்தைந்து கிலோமீட்டர் வேகத்தில் ஓடும். மரம் ஏறுதலிலும் நீந்துதலிலும் சிறப்பு பெற்றது. கரடி, ஒரு வருடம் அல்லது இரண்டு வருடத்திற்கு ஒருமுறை குட்டி இடும், பெரும்பாலும் ஒன்று அல்லது இரண்டு குட்டிகள் இடும். இனங்கள் மற்றும் துணை இனங்களைப் பொருத்து, இணை சேரும் காலம், கர்ப்ப காலம், குட்டிகளின் எண்ணிக்கை போன்றவை மாறும். சில இனக்கரடிகள் குளிர்காலத் தூக்கத்தின் (winter hibernation) போது குட்டிகளை இடும் தன்மையுடையது. அனைத்து இனக் கரடிகளின் குட்டிகளும் முடிகள் இன்றி கண்கள் மூடிய நிலையில் பிறக்கும். ஒரு கிலோவிற்கும் குறைவாக, சக்தியின்றி இருக்கும்.



குட்டிகளின் மீது மிகுந்த அன்பு கொண்டவை. இரண்டு அல்லது மூன்று வயதாகும் வரை குட்டிகளைத் தாய்க்கரடிகள் தங்கள் முதுகில் சுமந்து செல்லும்.குட்டிகளும் தன் தாயிடமிருந்து உணவு தேடுதலைக் கற்றுக் கொள்ளும். குட்டிகளைப் பாதுகாப்பதற்காக ஓநாய், சிங்கம் போன்ற விலங்குகளுடன் சண்டையிடும். இச்சண்டையின் போது சில சமயங்களில் தாய்க்கரடிகள் இறந்து விடும் சூழல் உண்டாகும். அப்போது குட்டிகள் அழுதும் முனங்கியும் தன் துயரத்தை வெளிப்படுத்தும். மூன்று வயதிற்குப் பின் கரடிகள் தனித்து வாழத்தொடங்கும். கரடிகளுக்கு எதிரி விலங்குகள் (கொன்றுண்ணிகள்) கிடையாது. கரடிகள் கூச்ச உணர்வுடனும் புறச்சூழலிருந்து தனித்தும் வாழும் இயல்புடையவை. ஆனால் அதன் தோற்றம் அதனை பயங்கரமான விலங்காகக் காட்டும். கரடிகள் மனிதர்களிடமிருந்து விலகி இருக்கவே விரும்பும்.

மனிதர்களைத் தாக்காது. ஆனால் மனிதர்கள் கரடியின் பாதம் மற்றும் பித்தப்பை போன்றவற்றிற்காக கரடிகளை வேட்டையாடுகின்றனர்.



இவ்வேட்டையின் போது மட்டுமே மனிதர்களைத் தாக்கும். கரடிகளின் வாழ்நாட்கள் இருபத்தைந்து முதல் முப்பது வருடங்களாகும்.

கரடிகளை அதன் உருவம், வாழ்விடம், வாழ்க்கைச்சூழல் போன்றவற்றின் அடிப்படையில் எட்டு வகைகளாகப் பிரிப்பர். எட்டு வகையான கரடி இனங்களில் துணை இனங்களும் (Sup-Species) அடங்கும்.

1. கருங்கரடி-Ursus americanus (Black bear) அல்லது அமெரிக்க கருங்கரடி(American Black Bear),
2. ஆசிய கருங்கரடி -Selenarctos thibetanus (Asiatic black bear),
3. பழுப்பு நிறக்கரடி - Ursus arctos (Brown bear),
4. பனிக்கரடி-Ursus maritimus (Polar bear),
5. பாண்டா கரடி -Ailuropus melanoleucus melanoleucus (Giant panda bear),
6. ஸ்பெக்டகல்ட் கரடி -Tremarctos ornatus (Spectacled bear),
7. ஸ்லோத் கரடி - Melursus ursinus (Sloth bear),
8. சூரியக் கரடி - Ursidae Helarctos malayanus (Sun bear )

போன்றவையாகும்.

## 1. கருங்கரடி (Black bear):




வட அமெரிக்காவில் காணப்படுவதால் இதனை அமெரிக்க கருங்கரடி என்றும் அழைப்பர். வட அமெரிக்காவின் மெக்சிகோ, ஹவாய் தவிர்த்து பிற அனைத்து மாகாணங்களிலும் இக்கரடியைக் காணலாம். நான்கு அடி முதல் ஏழு அடி (4-7) உயரத்தினையும் நூறு முதல் இருநூற்று எழுபது கிலோ கிராம் (100-270) எடையும் உடையது. கருங்கரடிகள் ஊன் உண்ணியாக வகைப்படுத்தப்பட்ட போதிலும் 75% முதல் 95% வரை தாவர வகை உணவினையே உண்கின்றன. கருங்கரடி என்பதினால் இவை கறுப்பாக இருக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. கறுப்பு, வெள்ளை, பழுப்பு, அடர் பழுப்பு, நீலநிறத்துடன் கூடிய கறுப்பு, வெளிர் பழுப்பு போன்ற நிறங்களிலிலும் காணப்படும்.

கருங்கரடி வகையில் பதினேழு துணை இனங்கள் உள்ளன. இவற்றுள் குறிப்பிடத்தக்கது கெர்மோட் கரடி (Kermode bear). கொலம்பியாவிலும் கனடாவிலும் காணப்படுகின்றது. கறுப்பு மற்றும் வெள்ளை நிறத்தில் காணப்படும். வெள்ளை நிற கரடியினை 'ஸ்பிரிட்' (Spirit bear) என்று அழைப்பர்.

கருங்கரடிகள் குளிர்காலத் தூக்கத்தில் ஈடுபடும். இதற்காக குளிர்காலத் தூக்கத்திற்கு முன் தனது எடையினை மிக அதிகமாக உயர்த்திக் கொள்ளும். ஏனெனில் இக்காலத்தின் போதே குட்டியிடும் தன்மையுடையது. மேலும் குளிர்கால தூக்கத்தின் போது சிறிதளவு கூட உணவு உண்ணாது, எங்கும் செல்லாமல் மரத்தின் அடியிலோ பொந்துகளிலோ தூங்கியபடி அசைவின்றி இருக்கும். இதனால் உடல் எடையும் இதயத்துடிப்பும் மிக மிகக் குறைந்து விடும். குளிர்காலத் தூக்கத்தின் முடிவில் இழந்த எடையினை மீட்கும் பொருட்டு கிடைக்கும் அனைத்து உணவுகளையும் (இறந்த விலங்குகள், பழங்கள்) உண்ணும். கரடியின் அனைத்து இனங்களும் குளிர்காலத் தூக்கத்தில் ஈடுபடுவதில்லை. கருங்கரடிகளின் எண்ணிக்கை போதுமான அளவில் இருப்பதால் சட்டப்படி வேட்டையாடுவதற்கு அமெரிக்க அரசு அனுமதிக்கிறது.

## 2. ஆசிய கருங்கரடி (Asiatic black bear):



ஆசிய கருங்கரடிகள் மத்திய மற்றும் தெற்கு ஆசியாவில் வாழ்கின்றன. இதனை இமாலயக் கருங்கரடி (Himalayan Black Bear), நிலாக் கரடி (Moon Bear) எனவும் அழைப்பர். மார்பில் வெள்ளை நிறத்தில் 'V' அல்லது 'U' வடிவில் மிருதுவான ரோமம் இருக்கும். அமெரிக்க கருங்கரடியை விட சிறியது. கழுத்தைச் சுற்றிலும் முடிகள் அதிகமாக இருக்கும். மற்ற கரடிகளுடன் ஒப்பிடும் போது நகங்கள் சிறியதாக இருக்கும். ஆசிய கருங்கரடிகளில் நான்கு துணை இனங்கள் உள்ளன. இவை அழிந்து வரும் விலங்குகளின் பட்டியலில் உள்ளன.

### 3. பழுப்பு நிறக்கரடி (Brown bear):



பழுப்பு நிறக்கரடிகள் அமெரிக்காவின் மத்திய பகுதியிலும் ஐரோப்பா மற்றும் ஆசியா கண்டம் முழுவதிலும் காணப்படுகின்றன. பழுப்பு நிறக்கரடியின் முதுகில் திமில் காணப்படும். மற்ற இனக் கரடிகளை விட இவை வலிமையானவை. பனிக்கரடிகளைப் போன்று அதிக எடை கொண்டவை. ஆண் கரடிகள் இருநூறு (200) முதல் எண்ணூறு (800) கிலோ கிராம் எடை உடையது. பழுப்பு நிறக்கரடியின் உணவில் குறிப்பிடத்தக்கது சால்மன் மீனாகும். பழுப்பு நிறக்கரடிகள் குளிர்காலத் தூக்கத்தின் போது குட்டிகளையிடும் தன்மையுடையது. பழுப்பு நிறக்கரடியின் துணை இனங்களில் குறிப்பிடத்தக்கது கொடுங்கரடி (Grizzly bear) மற்றும் காடீயேக் கரடியாகும் (Kodiak bear).

### 4. போலார் கரடி (Polar bear):



போலார் கரடியை பனிக்கரடி, துருவக்கரடி, கடல் கரடி என்றும் அழைப்பர். ஆர்டிக் பகுதியான ரஷ்யா, கனடா, ஐக்கிய அமெரிக்கா, டென்மார்க், கிரீன்லாந்து, நோர்வே, பின்லாந்து, சுவீடன், ஐஸ்லாந்து போன்ற நாடுகளில் வாழும். இவற்றின் மூக்கு, நாக்கு, நகம் மற்றும் தோல் போன்ற அனைத்தும் கருப்பு நிறமாகும். ஆனால் முடிகள் மட்டும் வெள்ளை அல்லது வெளிறிய மஞ்சள் நிறத்தில் இருக்கும். உடலைச் சுற்றிலும் நான்கு அங்குலத்திற்கு முடிகள் காணப்படும். இம்முடிகளே குளிரிலிருந்து கரடியைப் பாதுகாக்கின்றன.

போலார் கரடியின் முக்கிய உணவு சீல் ஆகும். பனிக்குமிழ் மற்றும் பனிப்பாறைகளை உடைத்து சீல்களை வேட்டையாடும். அதிக முயற்சிக்குப் பிறகே சீல்கள் அதற்கு உணவாகும். சீல்கள் கிடைக்காத போது பனிக்குமிழ்களை உடைத்துத் தன் கோபத்தை வெளிப்படுத்தும். பனிக்குமிழ்களில் நடப்பதற்கும் நீரில் நீந்துவதற்கும் ஏற்ப கால் விரல்களின் இடையே சவ்வு (webbed toes) போன்ற பகுதி காணப்படும். போலார் கரடி தொடர்ச்சியாக நூறு கிலோமீட்டர் தூரம் நீந்தும் தன்மையுடையது. எட்டு அடி முதல் பத்து அடி உயரமும் முந்நூறு கிலோ முதல் எழுநூற்றைம்பது கிலோ கிராம்(300-750) எடையும் உடையது. இது மற்ற இனக் கரடிகளை விட அதிகமான எடையாகும். ஆண் கரடிகளை விட பெண் கரடிகள் இரண்டு மடங்கு சிறியது. போலார் கரடிகள் புவி வெப்பமயமாவதாலும் மனிதர்கள் வேட்டையாடுவதாலும் அழிந்து வருகின்றன.

### 5. பாண்டா கரடி (Giant panda bear):



பாண்டா கரடிகள் சீனாவின் மத்திய மற்றும் தெற்கு பகுதியில் உள்ள மூங்கில் காடுகளில் வாழ்கின்றன. குறிப்பாக சீனாவின் சிச்சுவான்(Sichuan), ஷான்சி (Shaanxi) மற்றும் கன்ஷி (Gansu) வனப்பகுதிகளில் வாழ்கின்றன. சீனாவில் மட்டுமே காணப்படும் அரிய வகை விலங்காகும். பாண்டா கரடிகளின் கண், காது, கால், தோள் பகுதிகள் கறுப்பாகவும் மற்ற பகுதிகள் வெள்ளையாகவும் காணப்படும்.

பாண்டா கரடிகள் மூங்கிலை (Bamboo) விரும்பி உண்ணும். தொண்ணூறு (90) சதவீதத்திற்கும் மேல் மூங்கிலே அதனுடைய உணவில் இடம் பெறும். சிறு பூச்சிகள், மலர்கள் போன்றவையும் பாண்டா கரடிகளின் உணவாகும். கரடிக்குத் தேவையான சத்துக்கள் மூங்கிலில் இல்லாததால் மூங்கிலை அதிக அளவில் உண்ணும். ஒரு நாளைக்கு இருபது முதல் முப்பது கிலோகிராம் மூங்கிலை உண்ணும்.

தனது வாழ்நாளில் அதிகமான நேரத்தை மூங்கிலை உண்பதில் செலவிடும். மூங்கிலைப் பெருவிரலினால் (Thump Finger) கிழித்து உள்ளே உள்ள சதைப்பகுதியை உண்ணும். மூங்கிலை உண்பதற்கு ஏற்ப மணிக்கட்டையும் (Wrist Bone) வலிமையான தாடையையும், பெருவிரலையும் கொண்டுள்ளன. வருடத்திற்கு ஒருமுறை ஒரே ஒரு குட்டியை இடும். இரண்டு குட்டிகள் பிறந்தால் தாய்க்கரடி பராமரிப்பின் பொருட்டு ஒன்றை புறக்கணிக்கும்.

பாண்டா கரடிகள் இரண்டாயித்திற்கும் குறைவான எண்ணிக்கையில் இருப்பதால் அழிந்து வரும் விலங்குகளின் பட்டியலில் உள்ளன. மக்கள் மூங்கில் காடுகளை அழிப்பதாலும் முடிக்காக வேட்டையாடுவதாலும் இவ்வகை கரடிகள் அழிந்து வருகின்றன. மேலும் பாண்டா கரடியை மிருகக்காட்சி சாலையில் வளர்த்தால் அதனுடைய உணவின் பொருட்டு அதிக செலவு ஏற்படும். “ஒரு பாண்டா கரடியைப் பராமரிப்பதற்கு ஐந்து யானையை வளர்க்கலாம்” என்று கூறுவர். தற்போது சீனா பாண்டா கரடிகளைப் பாதுகாப்பதற்குப் பெரும் முயற்சி எடுத்து வருகிறது.

### 6. ஸ்பெக்டகல்ட் கரடி (Spectacled bear):

ஸ்பெக்டகல்ட் கரடிகள் தென் அமெரிக்காவின் அந்தீசு மலைப் பகுதியில் (Andes Mountain) மட்டுமே காணப்படுகின்றன. கறுப்பும் பழுப்பும் கலந்த நிறமுடையது. கண்களைச் சுற்றிலும் சாம்பல் கலந்த வெள்ளை நிறம் காணப்படும். இது பார்ப்பதற்கு கண்ணாடி அணிந்தது போல் இருப்பதால் இதனை கண்ணாடிக் கரடி என்றும் வெண்கண் வளையக் கரடி என்றும் அழைப்பர். மற்ற இனக் கரடிகளுடன் ஒப்பிடும் போது இவை இடைப்பட்ட (medium sized) உருவத்தையும் எடையையும் கொண்டது. வெண்கண்வளையக் கரடியும் குறைந்த எண்ணிக்கையுடன் அழிவை நோக்கிச் செல்கின்றன.



## 7. ஸ்லோத் கரடி (Sloth bear):

இந்தியா, இலங்கை, வங்காளதேசம், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், நேபாளம், பூட்டான், மியான்மர் போன்ற நாடுகளில் ஸ்லோத் கரடிகள் வாழ்கின்றன. தமிழகத்தில் கிருஷ்ணகிரி, சேலம் பகுதிகளில் அதிகம் தென்படுகின்றன.




ஆசிய கருங்கரடி மற்றும் பழுப்பு நிறக்கரடியைப் போன்று மார்பில் வெள்ளை நிறத்தில் 'V' அல்லது 'U' வடிவில் மிருதுவான ரோமம் இருக்கும். சிறிய கண்களும், பெரிய காதுகளும், நீண்ட மூக்கும், வளைந்த கூரிய நகங்களையும் உடையவை. தூசு படிந்த கறுப்பு அங்கியை அணிந்த மாதிரியான தோற்றமுடையவை. இந்த தோற்றமே ஆசிய கருங்கரடிகளிலிருந்து இவற்றை வேறுபடுத்துகின்றன. மற்ற வகைக் கரடிகளோடு ஒப்பிடுகையில் இவை மந்தமானவை. ஸ்லோத் கரடியின் விருப்பமான உணவு கரையான் மற்றும் எறும்பு ஆகும். ஒரே முறையில் 4,000 முதல் 10,000 எறும்புகளை உறிஞ்சிவிடும். மேலும் தேன், பழங்கள், பறவை முட்டைகள், பூக்கள் போன்றவற்றையும் விரும்பி உண்ணும். மக்கள் ஸ்லோத் கரடியைப் பிடித்து நகங்களை வெட்டி வித்தை காட்டுவதற்குப் பயன்படுத்துகின்றனர். இது சட்டத்திற்குப் புறம்பானதாகும். வாழ்விடங்கள் அழிக்கப்படுவதால் ஸ்லோத் கரடியும் அழிந்து வரும் சூழலில் உள்ளன.


## 8. சூரியக் கரடி (Sun bear) :

தென்கிழக்கு ஆசியாவின் வெப்பமண்டல மழைக்காடுகளில் சூரியக் கரடிகள் காணப்படுகின்றன. கரடி இனங்களிலே மிகச்சிறியது சூரியக் கரடி ஆகும். நூற்றிருபது முதல் நூற்றைம்பது சென்டிமீட்டர் உயரமும் முப்பத்தைந்து கிலோ முதல் எண்பது கிலோ கிராம் (35-80) எடையும் உடையது. இதன் மார்பிலும் 'U' வடிவில் மஞ்சள் கலந்த ஆரஞ்சு நிறத்தில் மிருதுவான ரோமம் இருக்கும். இந்த வடிவம் பார்ப்பதற்கு சூரியன் உதிப்பதைப் போன்று

இருப்பதால் சூரியக் கரடி என்று பெயர் வந்ததாகக் கூறுகின்றனர். மேலும் இக்கரடி தேன் கரடி (Honey bear), மலேயா கரடி (Malayan sun bear) என்றும் அழைக்கப்படுகிறது. மரம் ஏறுவதில் தனிச்சிறப்பு வாய்ந்தது. சூரியக் கரடியின் விருப்பமான உணவு தேன். தேனை உண்பதற்கு ஏற்ப வளைந்த நீளமான நாக்கினை உடையது. ஒரே துணையுடன் மட்டுமே இணை சேரும். சில நேரங்களில் தாய்க்கரடியுடன் இணைந்து குட்டிகளைப் பாதுகாக்கும். இறைச்சிக்காகவும் மருந்துப் பொருளுக்காகவும் சூரியக்கரடிகள் வேட்டையாடப் படுகின்றன.



## கரடிகள் வாழும் பகுதிகள்




1. கருங்கரடி
2. ஆசிய கருங்கரடி
3. பழுப்பு நிறக்கரடி
4. பாண்டா கரடி
5. போலார் கரடி
6. ஸ்பெக்டகல்ட் கரடி
7. ஸ்லோத் கரடி
8. சூரியக் கரடி

எட்டு வகை கரடி இனங்களில் பெரும்பாலான இனங்கள் அழிந்து வரும் விலங்குகளின் (Endangered Animals) பட்டியலில் உள்ளன. இதற்கு மனிதனின் சுயநலப்போக்கே காரணம். இயற்கையில் ஒவ்வொரு விலங்கும் மனிதச்சங்கிலியுடன் தொடர்புடையவை என்பதை மனிதன் உணர்ந்து செயல்பட வேண்டும். அவ்வாறு உணர்ந்தால் கரடிகளும் கால காலத்திற்கு நிலைத்து நிற்கும்.

***

கானகத்திலும் கடும் குளிரிலும்

வாழும் கரடியினம்

கிடைக்கும் உணவைக் கொண்டு

திருப்தி கொள்ளும் விலங்கு.

கூச்ச உணர்வுடைய கரடி மனிதர்களிடம்

இருந்து விலகியே வாழ்கிறது.

**உணவுச் சங்கிலியில் விலங்குகளுக்கும் மனிதனுக்கும்**

**தொடர்புண்டு என்பதை அறிந்து கொள் மனித இனமே!**




இரா.மாரியம்மாள்., M.A.,M.Phil.,

[மொழி ஆய்வாளர்]

உடன் உலகத்தமிழ்க் கல்விக்கழக தமிழ் ஆசிரியர்கள்

மற்றும் வரைகலையாளர்கள்.



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com www.tamilacademy.com